1990 மே 11]

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக்கேள்வி அய்ய லூரில் அரசு மருத்துவமனை கட்டப்படுமா என்று இருக்கிறது. ஆகவே, இவர்கள் கேட்டிருக்கிறார்கள் என்ற குறிப்போடு இந்த ஆண்டு மட்டும் 10 ஆரம்பச் சுகாதார நிலையங்களுக்கு கட்டிடங் கள் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஆரம்பச் சுகாதார நிலையமும் துவக்கப்படுவதற்காகத்தான் அந் தப் பணம் கொடுக்கப்படுகிறது. கட்டிடம் கட்டுவதற்காக அந் தத் தொகை ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை. இருந்தாலும் உறுப்பினருடைய கோரிக்கையை கவனித்து இந்த ஆண்டோ அல்லது வருகிற ஆண்டுகளிலோ படிப்படியாக கட்டிடங்களைக் கட்டிக் கொடுக்கிற முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இரவுப் பணி படி.

* 7801—திரு. குமரி அனந்தன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழ்நாடு அரசு மருத்துவமனைகளில் பணிபுரியும் நர்சு களுக்கு மத்திய அரசில் பணிபுரியும் நர்சுகளுக்கு வழங்கப்படுவது போல் இரவுப் பணி படி (Night Duty Allowance) வழங்கப்படுமா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே,

இது குறித்த செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை.

சித்த மருத்துவர்களுக்கு உதவித் தொகை.

* 8194—திரு. எம். முத்தையன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சித்த மருத்துவர்களுக்கு அரசு மாதா மாதம் கொடுத்துவரும் உதவித் தொகை சங்கராபுரம் தொகுதியிலுள்ள சித்த மருத்துவர்களுக்கு தரப்படவில்லை என்பதை அரசு அறி யுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுக்கு எப்பொழுது அளிக்கப்படும்?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS